Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (29-9-65) இதழ் 229

விசுவாவசு புரட்டாதி 13 ஜ: ஆகிர் பிறை 3 -புதன்கிழமை

சிறந்த புளொக் தயாரிப்பாளர்
Quality
BLOCK MAKERS
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## இனிப்பான பிரச்னை

புதுடில்லி, செப். 28

மகாராஷ்டிரத்திலிருந்து ஒரு விமானம் நிறைய இனிப்புப் பண்டங்கள் புதுடில்லி வந்தன. ஆஸ்பத்திரியில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் ராணுவத்தினருக்கு அன்பளிப்பாக இது அனுப்பப்பட்டுள்ளது. ஆனல்இனிப்புப்பண்டங்கள் அவர்களுக்குக்கொடுக்கப்படக் கூடாதுஎனடாக்டர்கள் தெரிவித்து விட்டதாய் இந்த இனிப்புக்களை என்ன செய்வது என்பது அதிகாரிகளுக்குப் பெரும் பிரச்னையாக இருக்கிறது

## சுவர்ண்சிங் மாஸ்கோ வழியாக ஐ. நா. புறப்பாடு

### பாகிஸ்தான் நிலையை ஏற்கமுடியாது என வற்புறுத்துகிறர்

புதுடில்லி, செப். 28

இந்தோ பாகிஸ்தான் கெடுபிடியில் அமைதியை நிலைநாட்டும் நடவடிக்கையுடன் அரசியல் பிரச்னையை இணைப்பதை பாரதம் ஒருபோதும் ஏற்காது என வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் மாஸ்கோவுக்குப் புறப்படுமுன் இங்கு கூறினர்.

ஐ. நா. வில் இந்தியத் தூதுகோஷ்டிக்குத் தலைமை வகிக்கும் பொருட்டு, அவர் மாஸ்கோவிலிருந்து நியுயோர்க் செல்லவிருக்கிறர். ரஷ்யப் பிரதமர் கோஸிஜினுக்கு திரு. சாஸ்திரியின் கடிதம் ஒன்றையும் அவர் எடுத்துச் செல்வதாகத்தெரிகிறது.

''பாகிஸ்தானின் நிலையை ஏற்பது ஆக்கிரமிப்புக்கு ஆதரவளிப்பதென அர்த்தம். தனது அரசியல் நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவே பாகிஸ்தான் தாக்குதல் தொடுத்திருக்கிறது. இந்த உண்மையை எல்லா நாடுகளும் அறிந்துவிட்டன என்பதில் சந்தேகமில்லை'. என்றும் திரு. சுவர்ண்சிங் கூறினர்.

''படைவிலக்கம், சமாதானம் ஆகிய விஷயங்களில் இந்தியா, ஐ. நா'வுடன் ஒத்துழைக்கும்'' என்றும் அவர் கூறினர்.

'போர்நிறுத்தம் ஏற்பட்ட பின்புங்கூட பாகிஸ்தான் வஞ்சகமான தாக்குதலை நடத்திவருகிறது. இத்தாக்குதல்கள் நிற்கவேண்டும். ஐ. நா. தீர்மானத்தை நல்லெண்ணத்துடன்தான் நாங்கள் ஏற்றேம்'' என்றும் சுவர்ண்சிங் குறிப்பிட்டார்.

திரு. சிங் வழியில் மாஸ்கோவிலும், ல்ண்டனிலும் பேச்சுக்கள் நடத்திவிட்டு நியுயோர்க் செல்வார்.

இந்தியா — பாகிஸ்தான் போர்நிறுத்த மேற்பார்வைக் கமிஷனின் தலைவராக நியமிக்கப்பட்குருக்டிம் ஜெனரல் ட்ரூஸ் மக்டொனுட் இன்று சைப்பிரஸிலிருந்து டில்லி வந்தார்.

இதற்கிடையில் ஒருதலைப் பட்சமாக இந்தியா போர் நிறுத்தம் செய்யவேண்டுமென பாகிஸ்தானே, பாதுகாப்பு சபையோ எதிர்பார்த்தால் அது ஒருபோதும் நடக்காது' என ஐ. நா. விலுள்ள இந்தியப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி கூறினர்.

## அக்டோபர் 23-ந் திகதி எம். ஜி. ஆர். வருகிறர்

பம்பலப்பிட்டி, செவ்.

திராவிட முன்னேற்றக் கழக பிரமுகரும், பிரபல சினிமா நடிகருமான எம். ஜீ. இராமச்சந்திரன் அக்டோபர் மாதம் 23-ந் திகதி இலங்கைக்கு வருகிறர்.

எம். ஜி. ஆருடன் பிரபல சினிமா நடிகையான பி. சரோஜா தேவியும் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் அடுத்தமாத இறுதியில் நடைபெறவிருக்கும் போட்டியொன்றின் இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகவே, அவர்கள் இலங்கைக்கு வருகின்றனர்என்று தெரியவருகிறது.

போட்டி நடத்துபவர்களுக்கு எம். ஜி. ஆர். அனுப்பியுள்ள கடிதத்தில், அக்டோபர்மாத இறுதியில் குறிப்பிட்ட திகதியில் இலங்கைக்கு வருவதாகத் தெரிவித்துள்ளார் என்று அறியப்படுகிறது.

இலங்கை விஜயத்தின் போது, எம். ஜி. ஆர்., அவரது பிறந்த இடமாகிய கண்டிக்கும் செல்வாரெனத் தெரியவருகிறது.

## காந்தி ஜெயந்தி தினம்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் கட்சியின் யாழ் கிளையின் ஆதரவில் அக்டோபர் மாதம் 2-ந் திகதி காந்தி ஜெயந்தி தினம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் காலை கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரார்த்தனையின் பின் அன்னதானமும் நடைபெறும்.

## எரிமலை வெடித்து300பேர் பலி!

மணிலா, செப். 28

எரிமலை வெடித்ததால் பிலிப்பைன்ஸ் நாட்டில் 300 பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது. மணிலாவிலிருந்து 50 மைல் தூரத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. இருகிராமங்கள்முற்றுக நாசமாகின.

இதற்குமுன் 1911-ம் ஆண்டு இந்த … கக்கியது காரணமாக 1300 பேர் மாண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## “போரை நிறுத்தும்படி பாகிஸ்தானுக்கு சொல்லுங்கள்; எங்களுக்கு வேண்டாம்

## ஆக்கிரமிப்பை உறுதியுடன் எதிர்க்க உத்தரவிட்டிருக்கிறேம்”

### பாதுகாப்பு சபையில் பார்த்தசாரதி முழக்கம்

நியுயோர்க், செப். 28

நிபந்தனையற்ற போர் நிறுத்த விண்ணப்பம் பாகிஸ்தானுக்கு மட்டும் தனியாக விடுக்கப்பட வேண்டும் என ஐ. நா. விலுள்ளஇந்தியப் பிரதிநிதி திரு.பார்த்தசாரதி பாதுகாப்பு சபையில் இன்று அறிவித்தார்.

நிபந்தனையற்ற போர் நிறுத்தத்தை பாகிஸ்தான் ஏற்கவில்லையாதலால் போர் நிறுத்த விண்ணப்பம் அந்நாட்டுக்கு மட்டுமே விடுக்கப்படவேண்டும் எனவும் அவர் கூறினர்.

''பாகிஸ்தான் ஆதிமுதல் நிபந்தனையற்ற போர்நிறுத்தத்தை எதிர்த்துவந்திருக்கிறது. ஆனல் இந்தியா பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்றுக்கொண்டது. பாதுகாப்பு சபை புதிதாக நிறைவேற்றியுள்ள தீர்மானம் இப்போது எங்கள் கவனமான பரிசிலனையில் இருக்கிறது'' என்றும் திரு. பார்த்தசாரதி குறிப்பிட்டார்.

''பாகிஸ்தானியர் போர் நிறுத்த நிலைகளை மீறினல் உறுதியாக எதிர்க்குமாறு எங்கள் படைகளுக்குக்கட்டளையிட்டிருக்கிறேம்.

''காஷ்மீர் விஷயமாகப் பாகிஸ்தான் தொடர்ந்து தொல்லை விளைவித்துவருகிறது. நிபந்தனையற்ற போர் நிறுத்தத்தை ஏற்று படைவிலக்கத்தை அது அமுலாக்காவிட்டால் இதுசம்பந்தமாக இந்தச் சபையிலோ, அல்லது வேறு எந்தச்சபையிலோ, எங்குமோ, எப்போதோ ஒருபோதும் தீர்வு ஏற்படமாட்டாது'' என்றும் திரு. பார்த்தசாரதி கூறினர்.

## சில மாணவருக்கே இடவசதி

பம்பலப்பிட்டி, செவ்.

அடுத்த மாதம் 5-ந் திகதி ஆரம்பமாகும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் 65-66ம் கழகவாண்டில் கல்வி பயில்வதற்கு மொத்தமாக சுமார் 500 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பரீட்சையில் திறமையுடன் சித்தியெய்திய சுமார் 1500 பேர்கள் மட்டுமே பேராதனை பல்கலைக் கழகத்தில் படிக்க அனுமதிக்கப் பட்டுள்ளனர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில அனுமதிக்கப்பட்டவர்களில் சுமார் 950 பேர்கள் மட்டுமே பேராதனை பல்கலைக் கழக விடுதிகளில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவர். மிகுதிப் பேர்கள் வெளியிலேயே தங்கியிருக்கவேண்டும்.

வைத்தியப் பகுதி. பல் வைத்தியப்பகுதி. விவசாயப்பகுதியைச் சேர்ந்த சகலரும் இயற்கை சாஸ்திரப் பகுதி, விஞ்ஞானப்பகுதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிலமாணவர்களும் பரீட்சையில் அவர்கள்பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக் கழக விடுதியில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்படும்.

## பட்டினசபையின் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சங்கானை சேரி வீடமைப் புத்திட்டத்தை ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் திறந்து வைக்கவேண்டுமென்ற தீர்மானம் சங்கானை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு விஜயம் செய்யும் பொழுது அவருக்கு ஒரு வரவேற்பு அளிப்பதெனவும் சபை தீர்மானித்துள்ளது.

## வடபகுதியில் துணிகளின் விலை அதிகரிப்பது ஏன்?

யாழ்ப்பாணம், புதன்

தீபாவளித் திருநாள் நெருங்க நெருங்க யாழ்ப்பாணத்திலும் மற்றக்கிராமங்களிலும் துணிவகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வேட்டி வகைகள் தற்பொழுது கடைகளில் கூடுதலான விலைகளுக்கே விற்கப்படுகின்றன. துணி தட்டுப்பாட்டை சில வியாபாரிகள் செயற்கையாகவே உண்டாக்கியுள்ளதாகவும் தெரியவருகிறது. வெள்ளவத்தை லங்கா நெசவுத் தொழிற் சாலையில் தீபாவளித் தினத்தையொட்டி வேட்டிகளும், சேலைகளும் உற்பத்தி செய்யாததினுலேயே இத்தட்டுப்பாடு உண்டாகியுள்ளது என்று யாழ்ப்பாணத்திலுள்ள சில பிரபல வர்த்தகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

1965-ம் ஆண்டில் துணி இறக்குமதி செய்வதற்கான லைசென்ஸ் இன்னமும் யாழ்ப்பாணத்தில் உள்ள துணி வர்த்தகர்களுக்கு அரசாங்கத்திஞல் வழங்கப்படவில்லை என்றும் இதன் காரணமாக துணிகளின் விலை கூடியுள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கூ. மொ. வி. ஸ்தாபனத்திலும் லங்கா வேட்டிகளும் மற்றும் பாவனையாளர்களுக்கு வேண்டிய துணிகளும் கிடைக்கவில்லை என்று பல பொதுமக்கள் புகார் செய்துள்ளார்கள்.

லங்கா வேட்டி இன்று கடைகளில் 10 ரூபாவிற்கும் கிடைப்பதரிதாகிவிட்டது.

## இன்று

### நவராத்திரி கதாப்பிரசங்கம்

வண்ணை சிவன் கோயில் நவராத்திரி விழாவை முன்னிட்டு, ஸ்ரீமத் மணிபாகவதர் மஹாபாரத விரிவுரைத் தொடரில் மாலை 5 மணி முதல் 'உத்தர குமாரன்' என்னும் சரிதைபற்றி கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

### கந்தகோட்டத்தில்

நல்லூர்க் கந்தகோட்டத்தில் மாலை 6-30 மணி முதல் விசேஷ மங்கள இசையும் 8 மணிக்கு நவராத்திரி விசேட பூஜையும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நமது அன்புதான் நமக்குள் பெரிய பாதுகாப்பாகும். அன்பான எண்ணங்கள் தோன்றினுல், நாம் பிறரைக் குறைகூறி கண்டிக்கமாட்டோம். அதனுல் நமக்குத் தீங்கு குறையும். மேலும் அன்புச் சூழலில், பிறரது "விரோத அம்புகளும்" முனை மழுங்கி தீங்கற்றுப்போம். —எச். டி. ஹாம்ளின்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதிமீ 13 உ (29-9-65)


## தபால், தந்தி வேலை நிறுத்தம்

கொழும்பு தபால், தந்திக் காரியாலயங்களில் ஒரு பிரிவு ஊழியர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளதால் கொழும்பிலும்வெளியூரிலும்தபால், தந்தி சேவைகள் ஸ்தம்பித்தன. பொதுமக்களைப் பெரிதும் பாதித்துள்ள இந்த வேலைநிறுத்தத்துக்குரிய காரணம் நியாயமானதுதானு?

தபால்களை அந்தந்த விலாசங்களுக்கு அனுப்புவதற்காக, தெரிவுசெய்யும் 'தபால் அறை' (மெயில்றூம்)யில் கடமையாற்றும் ஊழியர்களில் நூறு பேரை அதே காரியாலயத்தில் வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்தே இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நாட்டின் தபால், தந்தி சேவை மிகமோசமாக இருப்பதாக பொது மக்கள் அடிக்கடி குறைகூறி வந்தனர். பார்லிமெண்டிலும் மக்கள் பிரதிநிதிகள் தபால், தந்திச் சேவையின் சீர்கேட்டை எடுத்துக்கூறி வந்திருக்கின்றனர்! தபால்கள் உரிய நேரத்தில் விலாசதாரரிடம் போய்ச் சேராது. பெறுமதியான பொருள்களும், தஸ்தாவேஜுகளும் அனுப்பப்படும் பதிவுத் தபால்கள் சில சமயங்களில் விலாசதாரரையே சென்றடையா. கள்ளத்தனங்கள் அதிகரித்துவிட்டன. வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் தபால்கள் பலமாதங்கள் கழிந்தும் போய்ச் சேரமாட்டா. வெளிநாடுகளிலிருந்து இங்கு அனுப்பப்படும் கடிதங்களும் தபால் அறையில் தவங்கிடக்கும். இதனுல் பொது மக்கள் மட்டும் கஷ்டப்படவில்லை. வர்த்தகஸ்தாபனங்களுக்கும் வீண் நஷ்டம் ஏற்பட்டது. பொதுமக்களின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்த தபால், தந்தி அமைச்சர், தபால், தந்தி இலாகாவை புனரமைக்கும் நோக்கத்துடன் இலாகாவுக்குள்ளானஇடமாற்றத்துக்கு உத்தர விடப்பட்டது. தபால், தந்தி ஊழியர்களும் அரசாங்க சேவையைச் சேர்ந்தவர்கள். அரசாங்க ஊழியர்களுக்குள்ள சலுகைகள் வசதிகள் அவர்களுக்கும் உண்டு. அரசாங்க சேவையிலுள்ளவர்கள் இடமாற்றத்துக்குரியவர்கள். இந்நிபந்தனையை ஏற்றுக் கொள்பவர்களே அரசாங்க சேவைக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். எனவே தபால் தந்தி ஊழியர்கள் இப்பொழுது இலாகா ரீதியான இடமாற்றத்தை ஆட்சேபித்து வேலைநிறுத்தம் செய்வது சேவை நிபந்தனைக்கு முரணுனது. இது ஒருபுறமிருக்க தபால் இலாகாவில் சீர்கேடு நிலவுவதை தபால் ஊழியர்களும்அவர்களின் தொழிற்சங்கங்களும் நன்கறிவர். இச்சீர்கேடுகளுக்கு ஊழியர்கள் எல்லோருமே பொறுப்பு என்று கூறிவிட்ட முடியாது. தமது கடமையை நேர்மையாகவும் ஒழுங்காகவும் செய்யவர்கள் பலர் இருப்பதை நாமறிவோம், ஆனுல் ஒரு சில புல்லுருவிகள் செய்யும் தவறு மற்றவர்களின் பெயருக்கும் கேடு விளைவிக்கின்றது. தங்களுக்குள்ளேயே கடமையைச் சரியாகச் செய்யத் தவறும் ஊழியர்களைத் திருத்த வேண்டியது சகஊழியர்களினதும் அவர்களின் தொழிற்சங்கங்களினதும் கடமை. தவறு செய்யும் ஊழியர்களினுல் தபால் சேவைக்கே கெட்ட பெயர் ஏற்பட்ட பின் அதைத் திருத்த எடுக்கும் நடவடிக்கையை ஆட்சேபிப்பது தொழிற்சங்கங்களினது கடமையுமல்ல, உரிமையுமல்ல.

இடமாற்றம் முறையற்றதாக இருந்தால் அதை பேச்சுவார்த்தை மூலம் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்து நிவாரணம் தேடலாம். அல்லது ஒரு சிலமணிநேரம் அடையாள வேலைநிறுத்தம் செய்து ஆட்சேபம் தெரிவித்திருக்கலாம். பொதுமக்களுக்குச் சேவை செய்யவேண்டிய ஊழியர்கள் திடீர் வேலை நிறுத்தத்தின் மூலம் மக்களுக்கு வீண் கஷ்டங்களை ஏற்படுத்தினுல் அவர்களுக்கு பொதுமக்களின் ஆதரவும் அநுதாபமும் நிச்சயம் கிடைக்கமுடியாது. அது மட்டுமன்றி அவர்கள் தங்களுக்குத் தாங்களே தீங்கு செய்து கொள்பவராவர். சில குறைகளைத் தீர்த்துக் கொள்ள பொதுமக்களையும் நாட்டையும் பாதிக்கும் வேலைநிறுத்தங்களில் ஈடுபடுவது இக்காலத்துக்கு ஏற்றதுமல்ல.

## சகாயமான நிதி உதவி

இலங்கை உட்பட அபிவிருத்தி குறைந்த நாடுகள் மத்தியில் பொருளாதார வளர்ச்சியில் போதியளவு வேகங் காணப்படவில்லையென்றும் அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்திகுறைந்தநாடுகளுக்கு மேலும் சகாயமான நிபந்தனைகளுடன் நிதி உதவி வழங்கவேண்டுமென்றும் புனரமைப்பு அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அபிவிருத்தி குறைந்த நாடுகளுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகள் இப்பொழுதும் 'உதவி' செய்து வருகின்றனவென்பது உண்மையே. 'கடன் உதவி' என்ற பெயரால் கடனுக்கு அதிக வட்டி விகிதங்களை வாங்குவது உண்மையில் உதவியாகாது. நிபந்தனைகளுடன் கூடிய உதவிகள் அளிக்காமலும் அபிவிருத்திக்கான உதவியுடன் 'ஆயுதங்களை'ச் சேர்க்காமலும் உதவி அளித்தால் உலகில் 'அபிவிருத்தி குறைந்த நாடுகள்' மிகக்குறைவாகவே இருக்கும்.

பொருளாதார உதவியுடன் இராணுவ உதவியும் பெற்ற நாடுகள் சில வருடங்களில் அடைந்தமுன்னேற்றத்தை சிலநாட்களிலேயே நாசமாக்கிவிடுகின்றன. இதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் நல்ல உதாரணம்.

ஒரு நீர்வாயுக்குண்டு தயாரிப்பதற்கான அணுசக்தியை ஆக்கவேலைக்குப் பயன்படுத்தினுல் உலகமக்களில் யாருமே வேலைசெய்யவேண்டிய அவசியமிராது என்றும் பஞ்சமும் பசியும் தலைகாட்டமாட்டாதென்றும் உலக நிபுணர்கள் சில காலத்துக்குமுன் கருத்துத்தெரிவித்தனர்.

அபிவிருத்தி அடைந்த சில அதிர்ஷ்டமுள்ள நாடுகள், சுயநலத்தை சற்றே விட்டு, பின் தங்கிய நாட்டு மக்களுக்கும் தாராளமாக உதவினுல்தான், உலகில் அமைதியும் சுபீட்சமும் நிலவமுடியும். இதே சமயம் தலை தூக்கிவரும் எளிய நாடுகள் கூடுமானவரை தங்களுக்கிடையே விட்டுக்கொடுத்து சச்சரவுகளைத்தீர்த்துக்கொண்டு ஒற்றுமையுடன் ஒத்துழைத்து வாழ்ந்தால்தான், தலைதூக்கி அபிவிருத்தி காணமுடியும்.

# நாட்டிலும் நகரிலும்

கடந்த ஞாயிற்றுக்கிழமை நவாலி கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் அவ்வூர் பெற்றெடுத்த 'பண்டிதரத்தினம்' சு. நவரத்தினம் அவர்களையும் 'வித்தியாரத்தினம்' சோ. நடராசன் அவர்களையும் கௌரவித்த பொதுக்கூட்டம் ஒரு சின்ன இலக்கிய மகாநாடாகவே மாறிவிட்டது.

வித்துவான் வேந்தனுர் கலித்தொகையையும் திருமுருகாற்றுப் படையையும் மேற்கோள்காட்டி, நடராஜனின் படைப்புக்கள் சமஸ்கிருத மொழிபெயர்ப்புகளாயிருந்தாலும் தமிழ் மரபு பிறழாதவை என்று பாராட்டினுர். சீதாராம சாஸ்திரிகள் 'மிருச்ச கழகம்' என்றமூலநூலிலிருந்து வடமொழிப்பாடல்களை அழகாகப் பாடி நடராசனின் 'பொம்மை வண்டி' சில இடங்களில் மூலத்தையே மிஞ்சிவிட்டதென்று புகழ்ந்தார். முதலியார் சின்னத்தம்பி அவர்களும் வழக்கறிஞர் முத்துச்சாமிப்பிள்ளையும் ஆர். என். சிவப்பிரகாசமும் தங்களுடையபாராட்டுரைகளில் பல இலக்கிய வெடிகளைக்கொளுத்தி எறிந்தார்கள். புலவர்கள் கூடிவிட்டால் இலக்கியச் சுவைக்குச் சொல்லவேண்டுமா?

அந்தக் கூட்டத்தில் பல அதிசயமான உண்மைகள் வெளியாகின. நடராசனின் அருமைத் தந்தையார் நவாலியூர் சோமசுந்தரப் புலவரும், நவரத்தினம் அவர்களும் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் ஆசிரியர்களாய்க் கடமையாற்றியவர்கள். அதே கல்லூரியில்நடராசன், நவரத்தினம் அவர்களிடம் பாடங்கேட்டவர். முத்துச்சாமிப்பிள்ளை அவர்களும் நவரத்தினம் அவர்களும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒன்ருகப் படித்தவர்கள். வட்டுக்கோட்டையில் நவரத்தினம் முதலிய ஆசிரியர்கள் புலவர் அவர்ளுக்கு பிரியாவிடை வைத்த போது முத்துசாமிப்பிள்ளையவர்கள் அக்கல்லூரியின் மனேஜராக இருந்தார். முதலியார் சின்னத்தம்பி புலவரிடம் பாடங்கேட்டார். இப்படியே பல தொடர்புகள்.

கல்லூரியில் படிக்கும் போது நவரத்தினத்தை விடத் தாமே சரித்திரப் பாடத்தில் அதிகம் புள்ளி வாங்கினுரென்றும், இப்பொழுது மற்றவர் சரித்திர நூல்களை எழுதிக்கொண்டிருக்க தாம் படித்த சரித்திரத்தையே மறந்துவிட்டாரென்றும் முத்துசாமிப் பிள்ளையவர்கள் அழுது கொண்டே சிரித்தார். வாழ்க்கையின் போக்கேஇப்படித்தான்!

புலவர்கள் கூடினுல் கலகம் என்று திரு. சிவப்பிரகாசம் ஹாஸ்யமாகக் கூறியது போல அன்று இரண்டொரு குட்டிக் கலகங்களும் பிறந்தன. சோமசுந்தரப் புலவரின் மூத்த புதல்வர் 'பாலசுப்பிரமணியம்' என்று தகப்பனிட்ட பெயரை மாற்றி 'இளமுருகனுர்' என்று தனித்தமிழில் வைத்துக்கொண்டார். ஆனபடியால் அவருடைய இளைய சகோதரரும் 'நடராசன்' என்ற தமதுபெயரை 'ஆடலரசன்' என்று வைத்துக் கொள்ளவேண்டுமென்றுஒரு சர்ச்சை எழுந்தது. இதிலிருந்து, தனித்தமிழ் கட்சியினராகிய வேந்தனுரும், சிவப்பிரகாசரும், முதலியார் சின்னத்தம்பியும் வடமொழியில் தாங்கள் துவேஷம் கொண்டவர்களல்ல என்றும் தமிழ்மொழியில் உண்டான பற்றுதல் காரணமாகவே தனித்தமிழ் பிரயோகங்களை வற்புறுத்துகிறும் என்றும் விளக்கிய போது சீதாராம சாஸ்திரிகள் பலமாகத் தலையசைத்து ஆமோதித்துக் கொண்டார். சாஸ்திரிகள் தமது பேச்சில் தென்மொழியென்று கூருமல் 'தேன்மொழி' என்று குறிப்பிட்டதே அவரிடம் இதுபற்றி வேறு பேச்சில்லை என்பதைக் காட்டியது.

முழுக்க முழுக்க வடமொழி இலக்கியத்தில் அமிழ்ந்திப்போனநடராசன் இதுபற்றி என்ன நினைத்தாரோ தெரியாது. ஆனுல் தந்தையார் இட்ட பெயரை மாற்றி 'ஆடலரசன்' என்று வைத்துக்கொள்ள இனிமேல் அவர் விரும்பமாட்டாரென்று நிச்சயமாகக்கூறலாம்.

பாராட்டுரைகளைக் கேட்க வந்திருந்த இவ்விரு 'இரத்தினங்கள்' மீதும் அவர்களைப் பாராட்ட வந்த பேச்சாளர்கள் அத்துடன் நின்றுவிடாமல் சில பொறுப்புக்களைச் சுமத்திவிட்டுப்போயிருக்கிருர்கள்.

திரு. நவரத்தினம் அவர்கள் தாம் ஆங்கிலத்தில் எழுதிய மூன்று ஆராய்ச்சி நூல்களையும் உடனே தமிழில் ஆக்கித்தரவேண்டும். நடராசன் அவர்கள் பிறமொழி நூல்களை தமிழில் பெயர்க்காமல் தாமாகவே மூல நூல்களை எழுதவேண்டும். இவைதான் அந்தப் பொறுப்புகள்.

இதற்கு நானும் ஒரு பெரிய 'ஆமா' போடுகிறேன். —வழிப்போக்கன்

## சுண்டுக்குளி அக்கடமி

சுண்டுக்குளி அக்கடமியிலிருந்துசென்றவருடம்நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு 28 மாணவர்கள் தோற்றினுர்கள். இவர்களில் 13 பேர் பல்கலைக் கழகத்திற் கல்வி பயில்வதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர். வைத்தியப் பகுதிக்கு 5 பேரும், பொறியியல் பகுதிக்கு ஒருவரும், பல் வைத்தியப்பகுதிக்கு ஒருவரும், மிருக வைத்தியப் பகுதிக்கு ஒருவரும், விவசாயப் பகுதிக்கு ஒருவரும், இயற்கை சாஸ்திர. விஞ்ஞானப் பகுதிக்கு தலா இரண்டு பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அடுத்த வருடத்தில் தொழில்நுட்ப வகுப்புக்களையும் ஆரம்பிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

# ஐயாறன் எழுதுவது

ஒரு பௌத்த சிங்களவர் சிவஞானசித்தியாரின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்துவருகிருராம். தமிழரின் விவேகதகதையும் ஆழ்ந்த அறிவையும் - அதன் மூலம் உணரமுடிகிறதென்றும், அந்த நூல் தமது பல சந்தேகங்களைத் தீர்த்து சாந்தி அளிப்பதாகவும் தெரிவித்துவிட்டு, சிவஞானபோதத்துக்கு நல்ல ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கிடைக்குமா என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் எனக்குச் சொல்லமுடியாத ஒரு பெருமை, மகிழ்ச்சி. மற்றொரு புறம் வெட்கம். ஒரு சிங்கள பௌத்தர் நமது தமிழ்ச் சமய நூலைப் படித்துப் பயன் பெற்றுஅதன் மகிமையைப் போற்றுவதைக் கேட்க பெருமை. இந்த நூல்களை முறையாகக் கற்று உணரவில்லையே என்று எனக்கு வெட்கம். தமிழரில் சைவரில் எவ்வளவு பேருக்கு இந்நூல்களின் அருமை பெருமை தெரியும்!

சித்தியாரைப் படித்துவரும் அந்தச் சிங்களவர் யார் தெரியுமா? யாழ்ப்பாணத்திலே அரசாங்க அதிபராக இருக்கும் ஜயவீரா அவர்கள்தான்! அவர் அப்படிச் சொன்னதும், அவ்விரு நூல்களையும் முறையாகப் படிக்கவேண்டும்போல் புதுத் தூண்டுதலும் ஊக்கமும் ஏற்பட்டது.

ஃ ஃ ஃ

தெட்சணுமூர்த்தியும், சின்னராசாவும் போட்டா போட்டியுடன் ஒருவருக்கொருவர் சளைக்காமல் தவில் வாசித்தார்கள். அரைமணி நேரத்துக்குமேல் அதையே கவனித்து மிகவும் ரஸித்துக்கொண்டிருந்தார் ஜயவீரா. எங்கு தெரியுமா? யாழ். கலாக்ஷேத்திரத்தின் ஆண்டு விழாவில் மூன்ரும் நாளன்றுதான். தெட்சணுமூர்த்தியின் வாசிப்பை அன்று கூட்டத்துக்குத் தலைமைவகித்த அதிபர் பெரிதும் போற்றினுர். தமிழ்க் கலைஞர்களையும் கலைகளையும் ஒரு சிங்களவர் உண்மையில் ரஸித்துப் போற்றுவதாயின் அதுபற்றி எந்தத் தமிழர்தான் பெருமை கொள்ளமாட்டார்?

நமது கலைச் செல்வங்களையும் இலக்கிய சமயச் செல்வங்களையும் சிங்கள சகோதரர்களுடன் நாம் பகிர்ந்து கொண்டோமாயின், அது எவ்வளவு நன்ருக இருக்கும்! தமிழரை அவர்கள் பின்னர் இளப்பமாக எண்ணித் துவேஷிப்பரா? சித்தியார், சிவஞானபோதம் போன்ற அரிய தமிழ் நூல்களைச் சிங்களத்திலும் மொழிபெயர்த்து அளிப்பது பலவிதங்களிலும் பயனுள்ளதாகும்.

ஃ ஃ ஃ

சுமார் ஒன்றரை வருடகாலமாகத் தூங்கிக்கொண்டிருந்த யாழ். பிரதேச கலாமன்றம் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளதாயும்அதனிடம் ஓரளவு பணமும் இருப்பதாயும், கலாக்ஷேத்திரம் போன்ற கலை வளர்க்கும் ஸ்தாபனங்களுக்குக் கூடுமான உதவி அளிக்கலாமென்றும் அதிபர் ஜயவீரா அக்கூட்டத்தில் பலத்த கரகோஷங்களுக்கிடையில் அறிவித்தார்.

அரசாங்க ஆதரவு சிறிதுமின்றி கலை வளர்க்கும் ஸ்தாபனங்கள் பல இங்கு கஷ்டப்படுகின்றன. தமிழ் மன்னர்கள் இருந்த காலத்தில் கலைஞர்களுக்கு மான்யங்கள் கொடுத்து ஆதரித்து, கலைகளை வளர்த்தார்கள். பின்னர் இக்கலைஞர்களையும்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த நிறுத்த

# வாக்குறுதிகளை உடன் கௌரவியுங்கள்

## பாக்., இந்தியாவுக்கு பாதுகாப்பு சபை புதிய வேண்டுகோள்

### ஜோன்ஸனை சந்திக்க அயூப் விருப்பம்

நியூயோர்க், செப். 28

ஐ. நா. பாதுகாப்புசபை இன்று அதிகாலை நடத்திய அவசரக்கூட்டமொன்றில் யுத்தநிறுத்த உடன்படிக்கை அனுசரிப்பது சம்பந்தமான வாக்குறுதிகளை உடனடியாகக் கௌரவிக்குமாறு இந்திய, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

### படைகளை வாபஸ்பெறுக

சென்ற ஆகஸ்ட் 5-ம் திகதிக்கு முன்பிருந்த நிலைகளுக்கு ஆயுதப்படைகளை வாபஸ் பெறுமாறும் தனது தீர்மானத்தில் இரு நாடுகளையும் அது கேட்டுக்கொண்டது. கடந்த 20-ம் திகதி சபை நிறைவேற்றிய தீர்மானத்தை அமுல்நடத்த புதிய தீர்மானம் அவசியம்எனவும் அது கூறியது. வோட் பதிவின்றி ஏகமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### அவசரக் கூட்டம்

யுதாண்ட் சபை அங்கத்தினர்களிடையே தனித்தனியாக நடத்திய ஆலோசனைக்குப் பின் பாதுகாப்புசபையின் அவசரக்கூட்டம் இன்று அதிகாலை நடைபெற்றது.

சபைக்குமுன் யுதாண்ட் பேசியபோது துருப்புக்களை வாபஸ்பெறுவதை பாகிஸ்தான் நிராகரித்துவிட்டது என்றும், தீர்மானத்தின் ஒருபகுதியான படைவிலக்கத்தை தான் ஏற்கவில்லை என அது கூறிவிட்டதாயும் தெரிவித்தார்.

### நாங்கள் சும்மா இருப்போமா?

இந்தியப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி சபையில் பேசியபோது, பாகிஸ்தான் தொடர்ந்து எங்கள் துருப்புக்களைத் தாக்கிவரும்போது நாங்கள் வாளாவிருக்கவேண்டும் என எதிர்பார்க்கிறீர்களா'' எனக் கேட்டார். படைவிலக்கத்தை பற்றி விவாதித்து சபையின் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்றும், யுத்த நிறுத்தம் பற்றியே முதலில் சபை கவனம் எடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

சண்டைநிறுத்தமும், துருப்பு விலக்கமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைஎன யுதாண்ட் கூறினார்.

### மீண்டும் பயமுறுத்தல்

இதற்கிடையில் ஐ. நா. விலுள்ள பாகிஸ்தான் நிரந்தரப்பிரதிநிதி திரு. அம்ஜர் அலி, காஷ்மீர் விஷயமாக உடனடி அரசியல் தீர்வு ஒன்று ஏற்படாவிட்டால் மிகப் பெரியபோர் ஒன்று ஏற்படும் என யுதாண்டுக்குத் தெரிவித்திருக்கிறார். யுதாண்டுக்குச் சமர்ப்பித்துள்ள கடிதத்தில், பாகிஸ்தான் தன் துருப்புக்களை வாபஸ்பெறாது என்றும், அரசியல் தீர்வு ஏற்படுவதைத் தொடர்ந்தே அது நடைபெறுமென்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

### பூட்டோ--ரஸ்க் சந்திப்பு

பாகிஸ்தான் வெளிநாட்டுமந்திரி திரு. பூட்டோ, அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்கை நேற்று சந்தித்து, காஷ்மீரில் நிரந்தரத்தீர்வு ஒன்றுக்கு அமெரிக்காவின் ஆதரவைக் கோரியதாக அறிவிக்கப்படுகிறது.

### ஜோன்ஸனைக்காண ஆயூப் விருப்பம்

ஜனதிபதி அயூப்கான் அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனைச் சந்திக்க விரும்புவதாயும், ஆனால் இதற்கான திகதி இன்னும் நிச்சயிக்கப்படவில்லை என்றும் பூட்டோ, பின் நிருபர்களிடம் குறிப்பிட்டார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் விஷயமாக பாகிஸ்தான் நம்பிக்கைத் துரோகம்செய்துவிட்டதென்றும், இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நௌஷேரா பகுதியில் போர்நிறுத்தகோட்டுக்குஇப்பால் பாகிஸ்தானியர் நன்கு ஊன்றிக்கொண்டிருக்கிறார்களென அறிவிக்கப்படுகிறது.

### சீன ஒப்புதல்

அதே சமயம் சிக்கிம் எல்லைக்குக் குறுக்கே சீனர்கள் அடிக்கடி ஆத்திரமூட்டும்வகையில் ஊடுருவல் நடத்துவது குறித்து இந்தியா ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

தான் 3 இந்தியர்களைப் பிடித்துவைத்திருப்பதை சீன இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறது. தனது பிரதேசத்தில் அவர்கள் ஊடுருவியதால்தான் அவர்கள் பிடிபட்டார்கள் என சீன கூறியிருக்கிறது. சிக்கிம்—திபெத் எல்லையில் சீனர்கள் படைநிலைக்குழிகளைத் தோண்டிவருவதாக கேங்டாக்கிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

### 107 பேர் மாண்டனர்

ஜம்முவில் சிவிலியன்கள் மீது பாகிஸ்தான் முன்பு நடத்திய விமானத் தாக்குதல் பற்றி இப்போது தகவல் கிடைத்திருக்கிறது. இதில் 107 பேர் கொல்லப்பட்டதாயும், 200 பேர் காயமடைந்ததாயும், 60000 பேர் அகதிகளாயிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

## அடுத்த ஆண்டு இந்தியா அணுகுண்டு வெடிக்கும்

புதுடில்லி, செப். 28

இன்னும் ஒரு வருடத்தில் இந்தியா அணுகுண்டு ஒன்றை வெடிக்குமென விஷயமறிந்த அவதானிகள் கூறுகின்றனர்.

எனினும் அணுசக்தியை சமாதானக் காரியங்களுக்கே பயன்படுத்துவதென்பதும், அணு ஆயுத உற்பத்தியில் இறங்குவதில்லை என்பதும் அரசாங்கத்தின் தற்போதைய கொள்கை எனக் கூறப்படுகிறது.

அணுகுண்டு ஒன்றை வெடிக்க இந்தியா திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுவதுபற்றி தனக்கு எதுவும் தெரியாதென அணுசக்தி இலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

அணுக்குண்டு உற்பத்தியில் இந்தியாவின் நிலைமை பற்றி ஏற்கனவே பலநாட்டு நிபுணர்கள் கூறியிருககிறார்கள். இந்திய அணுசக்திக் கமிஷன் தலைவர் டாக்டர் ஹோமிபாபா, உத்தரவிடப்பட்டால் ஒரு வருடத்தில் அணுக்குண்டைத் தயாரிப்பதாகக் கூறியிருக்கிறார்.

அணுசக்தியை நீர்ப்பாசனத்திட்டங்களுக்கு உபயோகிப்பது போன்ற சமாதான நோக்கத்திற்கு பயன் படுத்துவது பற்றி சமீபத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அணுசக்திக்குத் தேவையான புளுட்டோனியத்தை பம்பாய்க்கருகில் இந்தியா தயாரித்து வருகிறது. கனடாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின்படி இந்த புளுட்டோனியத்தை சமாதானக் காரியங்களுக்கே பயன்படுத்துவதென ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால் இந்தியா, இப்போது சென்னைக்கருகில் உள்ள கல்பாக்கத்தில் புளுட்டோனியம் உற்பத்தியை ஆரம்பித்திருக்கிறது. அணுக்குண்டு தயாரிப்பதற்கு இந்தப் புளுட்டோனியத்தை உபயோகிப்பதை எவரும் கட்டுப்படுத்த முடியாது.

ஒரு அணு சோதனைக்கு 5 கிலோக்கிராம் புளுட்டோனியம் தேவைப்படுமென மதிப்பிடப்படுகிறது

சீனவின் அணு சோதனையைத் தொடர்ந்து இந்தியாவும் அணுக்குண்டு உற்பத்தியில் இறங்கவேண்டுமென்ற வற்புறுத்தல் அதிகரித்துவருகிறது.

சென்ற வாரம் 86 எம். பி.க்கள் திரு. சாஸ்திரிக்கு சமர்ப்பித்த மகஜரில், பாகிஸ்தானுடனுள்ள தகராறைத் தொடர்ந்து இந்தியாவுக்கு ராணுவ உதவி நிறுத்தப்பட்டதற்கு ஒரே பரிகாரம் அணுக்குண்டு உற்பத்திதான் என அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

எம். பி.க்களின் கடிதத்தைத் தாம் பத்திரமாக வைத்திருப்பதாகத் தனது கட்சி அங்கத்தினர்களுக்கு திரு. சாஸ்திரி கூறினார்.

## "எல்லைக் கோட்டை தொடர்ந்து மீறினல் அனர்த்தம் விளையும்"

### இந்தியாவுக்கு பூட்டோ எச்சரிக்கை

நியுயோர்க், செப். 28

படைகளை வாபஸ் பெறும்படி தாம் விடுத்த இரு கோரிக்கைகளுக்கும் இந்தியா இன்னும் பதிலனுப்பவில்லை என யுதாண்ட் அறிவித்திருக்கிறார்.

அதே சமயம், இந்தியா யுத்தநிறுத்தத்தை மீறிவருவதாயும், இது நிற்காவிட்டால் நிலைமை மோசமடையும் என்றும் திரு. பூட்டோ கூறியிருக்கிறார்.

இந்தியத் துருப்புக்கள் காஷ்மீரில் கொடுமை இழைத்துவருவதாயும், 30 கிராமங்களை அவர்கள் எரித்ததாயும், திரு. பூட்டோ மேலும் கூறினார்.

அக்னூர் பகுதியில் இந்தியத்துருப்புக்கள் பல காவல் நிலைகளை ஆக்கிரமித்ததாயும் டிட்வால் பகுதியில் பீரங்கிப் பிரயோகம் செய்துவருவதாயும் பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது.

இதற்கிடையில் காஷ்மீரில் ''விடுதலை வீரர்கள்'' ஒரு இந்திய ஹெலிகோப்டரை சுட்டு வீழ்த்தி, 111 இந்தியத் துருப்புக்களை கொன்றோ அல்லது காயப்படுத்தியோ இருப்பதாய் அது மேலும் கூறியது.

### ஏடன் நிலைமை

ஏடன், செப். 28

ஏடனின் முன்னள் பிரதமர் திரு. மக்காவி, தாம் ஐ. நா. வுக்குச் சென்று தனது நாட்டின் கட்சியை எடுத்துரைக்கப் போவதாய் கூறினார்.

அதே சமயம் 'ஈகிள்' என்ற பிரிட்டிஷ் விமானந்தாங்கிக்கப்பலும், சில யுத்தக் கப்பல்களும் ஏடனுக்கு வந்திருக்கின்றன.

### உலகப் பெரும் கப்பல்

டோக்கியோ, செப். 29

உலகிலேயே மிகப் பெரிய எண்ணெய்க்கப்பலை ஜப்பான் நேற்று மிதக்கவிட்டது. 1,50,000 டன் நிறையுள்ள இக்கப்பல் கால் மைல் நீளமுள்ளது. யோகஹாமில்அதுமிதக்கவிடப்பட்டது.

### வேலையற்ற சிங்கள சுருக்கெழுத்தாளர்

யாழ்ப்பாணம், செவ்.

இம்மாதம் 15-ந் திகதி தொடக்கம் யாழ் அரசாங்க அதிபர் காரியாலயத்தில் ஒரு சிங்கள சுருக்கெழுத்தாளர் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார். ஆனல் அவர் வேலையில் அமர்த்தப்பட்ட நாள் தொடக்கம் ஒருவிதமான வேலையும் கொடுக்கப்படவில்லையாம். பொதுவாக யாழ். அரசாங்க அதிபர் காரியாலயத்தில் அவர்செய்வதற்கு ஒருவேலையும் இல்லையெனத் தெரியவருகிறது.

### யூகோ. - பல்கேரிய கூட்டறிக்கை

பெல்கிரேட், செப். 28

உலகில் குழப்பத்தைத் தூண்டிவிட தீய சக்திகள் தொடர்ந்து வேலை செய்து வருகின்றன என்று யூகோஸ்லேவியாவும், பல்கேரியாவும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ. நா. வுக்கு அது ஆதரவு தெரிவித்திருப்பதுடன் இந்தியா, பாகிஸ்தானில் அமைதி நிலவும்படி பார்த்துக்கொள்ளுமாறு இரு நாடுகளையும் அது கேட்டுக் கொண்டிருக்கிறது.

### மேனன்-சாஸ்திரி சந்திப்பு

புதுடில்லி, செப் 28

கெய்ரோ சென்றிருந்த வி. கே. கிருஷ்ணமேனன் நேற்று பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்து ஜனதிபதி நாஸருடனும், இதர ஐக்கிய அராபியக் குடியரசுத் தலைவர்களுடனும் தாம் நடத்திய பேச்சுப்பற்றிக் கூறினார்.

பிரதம மந்திரி சாஸ்திரி பின் ஜனதிபதி ராதாகிருஷ்ணனுடன் பேச்சு நடத்தினர்.

### காங்கோவில்

லியப்போர்ட்விலி, செப். 28

காங்கோவில் அரசாங்கத் துருப்புக்கள், விமானப் படை உதவியுடன் கிளர்ச்சிக்காரர்களின் கடைசிக் கோட்டையை தாக்க ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

லண்டன், செப். 28

வியட்னமில் யுத்தத்தை முடிக்கும் விஷயத்தில் தாம், ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோவுடன் சேர்ந்து முயற்சிக்கப்போவதாய் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. [illegible] கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்; திங்கள் திருநெல்வேலி கிழக்கு இந்து இளைஞர் இயக்கத்தின் ஆதரவில் அடுத்த மாதம் 8-ம் 9-ம் திகதிகளில் இயக்கத்தின்திறந்த வெளிஅரங்கில் முத்தமிழ் விழா ஒன்று நடைபெறவிருக்கின்றது.

விழாவின் இரு தினங்களுக்கும் யாழ் காரியாதிகாரி திரு. சி. சிவஞானமும், கூட்டுறவுப் பகுதி உதவி ஆணையாளர் திரு. மு. மதிபாலசிங்கமும் தலைமைதாங்குவார்கள்.

இவ்விழாவில் யாழ். நகர மேயர் திரு. சு. செ. மகாதேவா, முன்னள் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் திருவாளர்கள் எஸ். கனகரத்தினம், ஆ. துரை ராஜசிங்கம், சி. எஸ். எஸ். மணிபாகவதர், யாழ்வாணன், சு. இராசநாயகம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்,

விழாவின் விசேஷ நிகழ்ச்சிகளாக உரைக்கோவை, கவியரங்கு, பட்டிமன்றம் முதலியனஇடம்பெறும். கலைநிகழ்ச்சிகளில் நாட்டியநிகழ்ச்சி. இன்னிசைக் கச்சேரி. வில்லுப்பாட்டு, நாடகம் முதலியனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

## 'வெளிநாடு செல்வதை நிறுத்துக'

பம்பலப்பிட்டி, செவ். நாட்டில் பல சேவைகள் செய்யப்படவிருக்கையில் மந்திரிகளும், உதவி மந்திரிகளும் வெளிநாடுகளுக்கு பிரயாணம் செய்துகொண்டிருப்பதை நிறுத்தி அவர்கள் தங்கள் கடமைகளைக் கவனிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த கொலன எம். பி. திரு. நந்தா மத்தேயு பிரதம மந்திரிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கோரியுள்ளார்.

## யாழ். தொழில் இலாகாவில் தனிச் சிங்களம்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாண மாவட்ட தொழிற் கந்தோரினுல் விநியோகிக்கப்படும் தொழில் பதிவு அட்டைகளும் கொழும்பில் நேர்முகப் பரீட்சைக்குக் கொண்டு செல்வதற்கான அட்டைகளும் வட மாகாணத்தின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் தனிச் சிங்களத்தில் விநியோகிக்கப் பட்டுவருகின்றன.

இது சம்பந்தமாகச் சில மாதங்களுக்கு முன்னர் தொழிற்சங்கங்கள் தொழில் மந்திரியை நேரில் பேட்டி கண்டபோது இவ்வித அட்டைகளை மும்மொழிகளிலும் வழங்க ஏற்பாடு செய்வதாக வாக்குறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


கொழும்பு தொழில் காரியாலயத்திலிருந்தும் கடிதங்கள் தனிச்சிங்களத்தில் தமிழ் பேசும் பொதுமக்களுக்கு அனுப்பப்படுவதை ஆட்சேபித்துச் சிலர் யாழ். மாவட்ட தொழில் அதிகாரிக்குப் புகார் செய்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

## வெளிநாடு செல்கிருர்

பம்பலப்பிட்டி, செவ். சர்வதேச ஒலிம்பிக் மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு தேசியமயசேவைகள் விளையாட்டு மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா ஸ்பெயின் செல்லவிருக்கிருர். இவர் நாளை இலங்கையை விட்டுப்புறப்படுகிருர்.

## விஜயதசமியன்று புராண நாடகம்

மன்னர், புதன் மன்னர்இந்துசமய வளர்ச்சிச் சங்கம், மன்னர் சித்தி விநாயகர் பாடசாலை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை விஜயதசமியன்று மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் 'நக்கீரர்' என்னும் புராண நாடகம் அரங்கேற்றம் செய்யவிருக்கிறது.



## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்; செவ்வாய் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் இசை பயின்று 'சங்கீதபூஷணம்' பட்டம் பெற்ற செல்வன் வே. சுந்தரலிங்கத்தின் இசை அரங்கேற்றவிழா நெடுந்தீவு அரசினர் வித்தியாலயத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது. விழாவிற்கு ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் தலைமை தாங்குவார்.

## கலாபவன நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், புதன் கொக்குவில் கலாபவனத்தாரின் நவராத்திரிவிழா கொக்குவில் மஞ்சவனப்பதி முருகப்பெருமான் ஆலயத்தின் தென்பாலமைந்த கலாபவன திறந்த வெளியரங்கில் இம்மாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை அக்டோபர் 2-ந் திகதியுடன் முடிவடையும்.

முதலாவது நாள் விழாவிற்கு திரு. த. நீதிராசாவும் இரண்டாவது நாள் விழாவிற்கு முதலியார் வை. மகேசனும் மூன்ரும் நாள் விழாவிற்கு திரு. எஸ். அம்பிகைபாகனும் முறையே தலைமை வகிப்பார்கள்.

பல சிறந்த இசைநிகழ்ச்சிகள் மூன்று நாட்களிலும் இடம்பெறும்.

## சரஸ்வதிவிழா

யாழ்ப்பாணம், புதன் வேம்படி மகளிர் கல்லூரியில் வருகிற வெள்ளிக்கிழமை சரஸ்வதிவிழாவை கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவிகள் கொண்டாடவிருக்கிருர்கள். விழாவில் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

பம்பலம்பிட்டி, செவ்வாய் கொழும்பு மீன் பிடி இலாகாவில் சரஸ்வதிபூசை இம்மாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை மாலை கொண்டாடப்படவிருக்கிறது.

இவ்விழாவை மீன்பிடி இலாகா சேமநல உரிமைச் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

## பாராட்டு விழா

சுழிபுரம், செவ்வாய் மாதகல கிராம முன்னேற்றச்சங்கத்தினர் மாதகல் கிராம சேவையாளராகக் கடமையாற்றி மூளாய் கிராமத்திற்கு மாற்றலாகிச்செல்லும் திரு. ஆ. முருகேசுவிற்கும், புதிய கிராம சபைத் தலைவராகத்தெரிவு செய்யப்பட்ட பண்டிதர் சி. இராமலிங்கத்திற்கும் ஒரு பாராட்டு விழா நடாத்தத் தீர்மானித்துள்ளனர்.

## பாடசாலைகளில் விவசாயம்

பம்பலப்பிட்டி, செவ். தேசிய அரசாங்கத்தின் உணவு உற்பத்தித் திட்டத்தில் உதவி செய்யும் பொருட்டு பாடசாலைகளில் விவசாயத்தை சாதனையில் செயல்படுத்த கல்விஇலாகா தீவிரகவனம் செலுத்திவருகிறது. சகல பாடசாலைகளிலும் உள்ள தரிசு நிலங்களில் மாணவர்கள் விவசாயம் செய்ய வழிவகை செய்யப்படும்.

ஒவ்வொரு நாளும் ஒரு பாடநேரம் விவசாயத்துக்கு ஒதுக்கப்படும், அந்தநேரத்தில் மாணவர்கள்ஒவ்வொருவரும் தோட்டத்தில் கட்டாயமாக வேலைசெய்ய வேண்டும். கீழ்வகுப்பு பிள்ளைகள் தோட்டங்களை துப்புரவு செய்யவும், தண்ணீர் பாய்ச்சவும், அவர்கள் வயதிற்கேற்ப வேறு சிறு வேலைகளும் செய்ய பயிற்றுவிக்கப்படும். மத்திய, மேல் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் நிலத்தை பண்படுத்தல், தண்ணீர் இறைத்தல் போன்ற வேலைகள் செய்ய பயிற்றுவிக்கப்படுவர். பாடசாலைகளில்உள்ள விளையாட்டு மைதானம் தவிர்ந்த, ஏனைய விவசாயத்துக்குகந்த நிலம் முழுவதும் தோட்டச் செய்கைக்கு பயன்படுத்தப்படும் இவற்றுடன் பாடசாலைக்கு அருகில் தனியார் காணிகளை குத்தகைக்கு எடுத்து பாடசாலை விவசாயம் செய்யவும் அனுமதிக்கப்படுவர்.

## மாதா திருநாள்

யாழ்ப்பாணம், புதன் கொழும்புத்துறை அர்ச் செபமாலை மாதாவின் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 25-ந் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகியதைத் தொடர்ந்து நவநாட் கொண்டாட்டத்தின் கடைசிநாளான அக்டோபர் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பெரிய பாடற்பூசையும், அதைத்தொடர்ந்து திருச்செரூப சுற்றுப்பிரகாரமும் நடைபெறும்.

## கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது

கல்கத்தா, செப். 28 கல்கத்தாவிலுள்ள பாகிஸ்தான் துணை ஹைகமிஷனரின் நடமாட்டத்துக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை மேற்கு வங்க அரசாங்கம் இப்போது விலக்கியிருக்கிறது.

## வார்ட் பணியாளருக்கு பாராட்டு

பம்பலப்பிட்டி, செவ்வாய் 'வார்ட் பணியாளர்கள் சேவை மிகவும் மகத்துவமானது. இதை நாம் நன்கு உணர்ந்திருக்கின்ருேம். சமூகசேவையில் இலங்கை ஏனைய நாடுகளைப்போல அதிகம் முன்னேறவில்லை. அதனுல் பெண் தாதிகள் ஆண் நோயாளர்களுக்கு தேவையான சில சேவைகளைச் செய்யமுடியர்திருக்கின்றது' என்று சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. கு. பாலசிங்கம் அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்க ஏழாவது வருடாந்தக்கூட்டத்தில் உரை நிகழ்த்தும் பொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுகாதார சேவையிலுள்ள பணி நோயாளர்களில் சுமார் 600 பேர் 3 அல்லது 4 வருடங்களுக்கிடையில் தாதிகளாகச் சேர்க்கப்படுவார்களென்றும் இதற்கான முதற்பிரிவு தெரிவு எதிர் வரும் கார்த்திகை மாதத்திற்குள் நடைபெறும் என்றும் மேலும் திரு. பாலசிங்கம் தெரிவித்தார்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. ஜீ. ஏச். பெரேரா உட்பட பலர் பேசினர்.

## சங்கானையில் திரைப்படவிழா

சுழிபுரம், செவ்வாய் இலங்கை-செக்கோசிலோவாக்கிய நட்புறவுச் சங்கத்தினரால் இம்மாதம் 29-ம் திகதி தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு சங்கானை மணிமகால் படமாளிகையில்செக்கோசிலோவாக்கிய பரிசு பெற்ற படங்கள் இலவசமாக பிற்பகல் 3-30 மணிக்கு காண்பிக்கப் படவிருக்கின்றன. சிறுவர்க்கான படங்கள் இவற்றில் முக்கிய இடம்பெறும்.

## கலைவாணிக்கு வெற்றி

சண்டிருப்பாய், செவ். சண்டிருப்பாய் கலைவாணி ஸ்போட்ஸ் கிளப்புக்கும் மாசியப்பிட்டி ஸ்போட்ஸ் கிளப்புக்குமிடையே சிநேகித பூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின்போது சண்டிருப்பாய் கலைவாணி ஸ்போட்ஸ் கிளப் 5—0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டி கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது,




இறைவன் திருமேனியில்
சந்தனக் காப்பிட்டு
அலங்கரிக்க மிகவும் உகந்த
பச்சை சந்தனம்
உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறேம்.
என்றும் எங்களிடம் கிடைக்கும்.
சுந்தரம் பிரதர்ஸ்
கோவில் அபிஷேகப்பொருட்கள்
மருந்துச்சரக்கு விற்பனையாளர்
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வெங்காயம், தக்காளி, மிளகாய், கத்தரி, கோவா முதலிய பயிர்களுள் உண்டாகும் களைப்புல்லை அழிப்பதற்கு
புதிய மருந்து
டெக்தால்
DACTHAL
Agents :
PHONE: 397 ROYAL DISPENSARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அனலைதீவு கிராமசபை

அனலைதீவு கிராமசபை சித்த ஆயுள்வேத வைத்திய சாலைக்கு சித்த ஆயுள்வேத முறைப்படி தயார் செய்த மருந்து வகைகள், சூரண வகைகள், எண்ணெய் வகைகள், ஆசவ அரிஸ்டவகைகளும், லேகியம், பஸ்பம், செந்தூரம் முதலியன முறைப்படி தயார்செய்து விநியோகிப்பவர்களிட மிருந்து மருந்து வகைகளின் விலைப்பட்டியல்கள் 7-10-65-ம் திகதி வியாழக்கிழமைக்கு முன் கிராமசபைத் தலைவர், அனலைதீவு என்ற விலாசத்துக்குஅனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,
கிராமசபைத் தலைவர்,
879 அனலைதீவு,

### வட இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை (2-10-65) காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சங்க அங்கத்தவர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

செல்வி ரூபவதி சிவபாதசுந்தரம்,
880) காரியதரிசி.




### கொழும்பு
புதன் 29-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள். 7-30 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 படப் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை 6-45 பாட்டு, 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நேயர்விருப்பம், 10-00 தேர்ந்தஇசை.

### 'உண்மையில் தட்டுப்பாடு கிடையாது'

பம்பலப்பிட்டி, செவ்.

பம்பாய் வெங்காயத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் எதுவுமில்லை எனவும், வியாபாரிகள் வெங்காயத்தை பதுக்கி, வேண்டுமென்றே தட்டுப்பாட்டை ஏற்படுத்திவருகிறார்கள் என்றும் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி தெரிவித்துள்ளார். தேவையான வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், ஆனால் வியாபாரிகள் இந்தியா—பாகிஸ்தான் சண்டையை சாட்டாக வைத்து பெருந்தொகையான வெங்காயத்தைப் பதுக்கிவிட்டு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக்கூறி அதிக விலைக்கு விற்கிறார்களென்றும் பொது மக்கள் இதுகுறித்து கவனமாக இருக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

### உப்பளத்தில் நிபுணர்கள்

சாவகச்சேரி, செவ்.

ஆனையிறவு உப்புக்கடலேரித்திட்டத்தை விஸ்தரித்து இலங்கைக்குத் தேவையான அளவுக்கு அதிகமாக உப்பை உற்பத்திசெய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் விதத்தில் இலங்கையில் உப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இதற்கான புதிய திட்டங்களைக் கொண்ட அறிக்கையை இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும்பொருட்டு இரு பிரஞ்சு நிபுணர்கள் தற்போது ஆனையிறவு அரசாங்க உப்பளத்திற்கு வந்துள்ளார்கள். இவர்கள் இருவாரங்கள் அங்கு தங்கியிருப்பார்கள்.

### 'சிறிமா தலைமையில் விரைவில் ஆட்சி நடத்துவோம்'

மாத்தறை, செவ்வாய்

சுதந்திரக்கட்சி - எதிர்க்கட்சி கூட்டு முன்னணியின் நோக்கம் இந்த நாட்டில் ஒரு சோஷலிஸ்ட் அரசாங்கத்தை ஸ்தாபிப்பதே. எங்கள் நாட்டின் சமூக புரட்சிக்கு காரணமாய் இருந்தவர் காலஞ்சென்ற பண்டாரநாயகா என்பது உண்மை' என்று பண்டாரநாயகா நினைவுதினவிழாவில் பேசிய பாராளுமன்றஉறுப்பினர் திரு. பி. எச். வில்லியம் சில்வா குறிப்பிட்டார்.

திருமதி பண்டாரநாயகாவின் தலைமையில் கூடிய விரைவில் ஒரு சோஷலிஸ்ட் அரசாங்கத்தை ஒற்றுமை முன்னணி அளிக்கும் என்று டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. பிறின்ஸ் குணசேகராவும், திருமதி விவியன் குணவர்த்தனவும் உட்பட பலர் பேசினர்.

### திருநாள்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை அர்ச். செபமாலை மாதா திருநாள் இம்மாதம் 25-ந் திகதி தொடங்கி நடைபெறுகின்றது. 2-10-65 -ல் தேவநற்கருணைத் திருநாள் பி. ப. 7-00 மணிக்கு கோயில் முன்வீதியில் சற்பிரசாத சுற்றுப்பிரகாரம் நடைபெறும். 3-10-65-ல் காலை 7-00மணிக்கு பெரிய பாடற் பூசையும், சுற்றுப்பிரகாரமும் நடைபெறும். வெளியிடங்களிலிருந்து வடும் பக்தர்களுக்கு போதிய வசதிசெய்யப்பட்டுள்ளது. 1078

### மாற்ற சபை மீண்டும் வேண்டும்
#### இஸ்லாமிய ஆசிரியர் கோரிக்கை

பம்பலப்பிட்டி, செவ்.

''தொழிற்சங்கப்பிரதிநிதிகளுடன் மீண்டும் ஆசிரியர்கள் மாற்றச் சபை உருவாகவேண்டும்'' என்றுஅகில இலங்கை அரசாங்க இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தினர் கல்வி மந்திரிக்கு அண்மையில் சமர்ப்பித்த மகஜர் ஒன்றில் கேட்டுள்ளார்கள் எனத்தெரியவருகிறது.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிட்டதாவது:

ஆசிரியர்கள் கூட்டுறவு முறையில் வீடுகட்டுவதற்கு எல்லா வசதிகளையும் அரசாங்கம் கொடுத்துதவ வேண்டும்.

தேவையற்ற முறையில் ஆசிரியர்கள் மாற்றம்செய்யப்படும் முறை உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் எல்லோர்க்கும் சமசம்பளம் வழங்கப்பட வேண்டும்.

### அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது

உடுப்பிட்டி, புதன்

கடந்த சனிக்கிழமை ஆனைப்பந்தியில் லொறி மோதி மாண்டவரின் சடலம் அல்வாய் தெற்கைச் சேர்ந்த சின்னையா என்பவர் தான் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வதிரிஉல்லியநெல்லை அம்பாள் ஆலய திருவிழாவுக்காக வாண, வெடிவகைகள் வாங்குவதற்காகவே இவர் யாழ்ப்பாணம் சென்றிருந்தாராம். கடந்த வெள்ளிக்கிழமை சென்ற இவர்; சனியும், ஞாயிறும் திரும்பி வராததையிட்டு எவரும் கவனமெடுக்கவில்லையென்றும் மூன்று நாட்களாகியும் வரவில்லையே என்ற காரணத்தால் பத்திரிகை 'ஈழநாடு' செய்தியைத் தொடர்ந்து வந்து பார்த்த பிறகே அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

## வரி விளம்பரம்

### தேவை

கொழும்பில் உள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் கடமையாற்ற காவற்காரர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் 35—45 வயதுக்குட்பட்டவர்களாகவும் குறைந்தது 5 அடி 6 அங்குல உயரமுடையவராகவும் இருக்க வேண்டும். தெரிந்தெடுக்கப்படுவோர் பகலிலோ, இரவிலோ 8 மணித்தியால வேலை செய்யக் கோரப்படுவர். ஆரம்பத்தில் நாளொன்றுக்கு 4 ரூபாவும், நிரந்தரமாகிய பின்னர் மாதமொன்றுக்கு 110 ரூபாவும் வேதனம் வழங்கப்படும். பிணைப்பணம் செலுத்த வேண்டும். விண்ணப்பிக்கவும்:- விளம்பர இல. 1073, மே/பா- ஈழநாடு, யாழ்ப்பாணம். 1073

பத்திரிகைப் பணியிலும் கைத்தொழில் பகுதியிலும் கடமை புரிவதற்கு படித்தவர்கள் கீழ்வரும் பதவிகளுககு உடனே தேவை. மனேஜர், ஸ்ரோர்கீப்பர், கெஷியர், பிரதிநிதிகள், கிளார்க்: சம்பளம் முறையே ரூபா 300, 200, 150, 125, 100 கொடுக்கப்படும். டிப்போசிட் பணம் ரொக்கமாக முறையே ரூபா3500, 3000, 2000, 1000, 1000 கட்ட வேண்டும். நேர்மையும் நம்பிக்கையுமுள்ளவர்கள் நற்சான்றுப் பத்திரங்களுடனும் டிப்போசிட் பணத்துடனும் இம்மாதம் 29-ம் 30, ம் திகதிகளில் நேரில் வரவும். உரிமையாளர் தமிழ்நேசன், சாலி கோப்பறேஷன். 30, 32, பேங்ஷால் வீதி. யாழ்ப்பாணம், 1074

### விற்பனைக்கு

சரித்திரபாட வழிகாட்டி வினா—விடை G. C. E. வகுப்பு. 1965 புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதிய சரித்திரபாட வழிகாட்டி வினா—விடை. விலை: 3-50. ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1057

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 6 பரப்புக்காணியும் மில்லும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். 96/1, கண்டிறோட், யாழ்ப்பாணம். 1065

### தேவை

தையல்கலையில் அனுபவம் வாய்ந்த சாறி ரசில்ஸ் போடத்தெரிந்த பெண்கள் தேவை. 1-10-65 பிற்பகல் 2 மணி — 5 மணி வரையில் நேரில் வரவும். தையற்கலையில் சிறிது அனுபவம் உள்ள பெண் மனேஜர் தேவை. பிணைப்பணம் ரூபா 500/-. எமியுரெக்ஸ் காமன்ஸ், 149, மேல்மாடி, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 1077


சேலைகள் நெய்வதற்கு ஒருவருடம் அல்லது ஆறு மாதம் நெசவுத் தொழிலில் பயிற்சியுள்ள பெண்கள் தேவை. டிசையின் போட்ட சேலை நெய்யும் தகுதியுள்ளோருக்கு விசேஷ சலுகை அளிக்கப்படும். முதலாம், இரண்டாம் திகதி காலை 9-00 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை ஹரன் நெசவுநிலையம், அன்னமாளிகை, மெயின் வீதி, காங்கேசன்துறை என்ற முகவரிக்கு நேரே வரவும். 1076

### 4-வது ஜனத்திரள் வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2 காட்சிகள்;
சனி, ஞாயிறு 4 காட்சிகள்


**சிவாஜி கணேசன், சாவித்திரி**
**எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா**
நடிக்கும்



**கைகொடுத்த தெய்வம்**

உ
சிவமயம்
கொக்குவில் கலாபவன

### நவராத்திரிவிழா



(நாதஸ்வரம் - வாய்ப்பாட்டு -பரதநாட்டியம்)
30-9-65 — 2-10-65

மாலை 6-30 மணி தொடக்கம்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகப் பெருமான் ஆலயத்தின் தென்பாகத்திலமைந்த

**கலாபவன திறந்த வெளியரங்கில்**

தினமும் மூன்று நிகழ்ச்சிகளும் நிகழும்
அபிமானிகளையும் அன்பர்களையும் அழைக்கின்றோம்

கொக்குவில். கலாபவன நிர்வாகிகள்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
Edgar Wallace's
Scotland yard Accepts The Challenge

இலங்கையில் முதன்முதலாக
யாழ். வின்ஸர் திரையில்
1 - 10 - 65
வெள்ளிக்கிழமை முதல்
பிற்பகல் 2-30 மணிக்
காட்சியுடன் ஆரம்பமாகிறது
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்,
சரோஜாதேவி,
சௌகார் ஜானகி
புதிய பறவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோ-பாகிஸ்தான் யுத்த முனைகளில்...

# திடீர் தாக்குதல்களும் பல ஊடுருவல்களும் யுத்தநிறுத்தப் கேலிக்கூத்தாகிறது இரு பகுதியிலும் உயிர்ச்சேதம்

## ராஜஸ்தான் முதல் ஜம்முகாஷ்மீர் வரை பல்வேறு இடங்களில் கெடுபிடிகள்

புதுடில்லி, செப். 27

லாகூர் அரங்கில் பாகிஸ்தானியர் திடீர் தாக்குதல், ஊடுருவல் ஆகியவற்றை மேற்கொண்டு வருவதாயும், பர்ச்சிக்கருகே இந்திய வீரர்கள் திருப்பிச் சுட்டதில் பாகிஸ்தானியருக்கு கடுஞ் சேதம் ஏற்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

கைகலப்பு நடந்த இடத்தில் பாகிஸ்தானியரின் 15 சடலங்கள் காணப்பட்டன என்றும், மற்றும் பல சடலங்கள் அங்குள்ள வாய்க்காலில் அடித்துச் செல்லப்பட்டது தெரிந்தது என்றும் அறிவிக்கப்பட்டது. சில அதிகாரிகள் உட்பட பல பாகிஸ்தான் வீரர்கள் சிறைப்பிடிக்கப் பட்டனர்,

அதேசமயம் ராஜஸ்தானிலிருந்து ஜம்மு காஷ்மீர் வரை போர்நிறுத்தக் கோட்டை பாகிஸ்தானியர் ஊடுருவி வருவதாக அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தானியர் ஓரிடத்தில் நடத்திய திடீர் தாக்குதல் காரணமாக 2 அதிகாரிகள் உட்பட 65 இந்திய வீரர்களைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

மாறுவேடத்தில் காணப்பட்டபல ஊடுருவாளர்கள் பிடிக்கப்பட்டனர் பாகிஸ்தான் படைகளிடமிருந்து இப்போது மற்ருேர் சீன சாதனம் கைப்பற்றப் பட்டிருக்கிறது. பாகிஸ்தானியர் உபயோகித்த டாங்கி எதிர்ப்பு ஏவுகருவிகள் மேற்கு ஜெர்மனியில் செய்யப்பட்டன எனத் தெரியவருகிறது.

ஸியால் கோட் அரங்கில் பாகிஸ்தானியர் படைநிலைக் குழிகளை அமைத்து வருகிருர்கள். ராஜஸ்தானிலுள்ள பார்மிர் பகுதியில் நடைபெற்ற கைகலப்பில் சில பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர் என்றும், சிலர் பிடிபட்டனர் என்றும், இதர ஊடுருவாளர்கள் ஓடிவிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானியரின் ஊடுருவல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருப்பது தெரிவதாவும், சக்தி வாய்ந்த 3 அங்குல மோர்ட்டார் ஆயுதம் அவர்களுக்கு சப்ளை செய்யப்பட்டிருப்பதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

அமைதி பராமரிப்பு படை எதையும் பாரதம் தன் பகுதிக்குள் அனுமதிக்காது என பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் அறிவித்தார். ஐ. நா. மேற்பார்வைக்குழு அமைதி பராமரிப்பு படையாக இருக்கக் கூடாது என தாம் யுதாண்டிடம் தெரிவித்திருப்பதாயும் அவர் கூறினார்.

ஜெனரல் நிம்மோவின் அறிக்கை பொதுவாக நியாயமானது என்றும் திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

திபேத்தில் சீனு மனித உரிமையை மீறியிருக்கிறது என்றும், இம்முறை சீன அங்கத்துவம் ஐ. நா. வில் எழுப்பப்படும் எனத் தாம் கருதவில்லை என்றும், சீனுவின் ஐ. நா. பிரவேசத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதே இப்போது இந்தியாவின் கொள்கை என்றும் அவர் மேலும் கூறினார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானப்படி, தனது துருப்புக்களை ஆகஸ்ட் 5-ம் தகதிக்கு முன்னிருந்த நிலைகளுக்கு விலக்கிக் கொள்ளுவதற்கு பாகிஸ்தான் மறுத்து விட்டதென்று ஐ.நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் பாதுகாப்புச் சபைக்குத் தெரிவித்திருக்கிறார்.

இந்திய-பாகிஸ்தான் யுத்த முனைகளில் யுத்தவிதிகளை பாகிஸ்தான் தொடர்ந்து மீறிவருவதாக இந்தியாகுற்றம்சாட்டியிருக்கிறது.

இந்திய பாகிஸ்தான்யுத்த நிறுத்தத்தையும் படைவிலக்கலையும் மேற்பார்வைசெய்வதற்காக அனுப்பப்படவிருக்கும் ஐ. நா. பொலிஸ் படையின் தலைவர் நிக்கோஸியாவிலிருந்து புதுடில்லிக்குச்செல்கிறார்.

கராச்சி, டாக்கா, ராவல்பிண்டி ஆகிய நகரங்களிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளுக்கு பாகிஸ்தான் அரசாங்கம் விதித்திருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுவிட்டன.

யாழ். ஆஸ்பத்திரியில்

# ஒரே நாளில் இரு குழந்தைகள் ஏற்பினுல் மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சுகவீனம் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த இரு குழந்தைகள் நேற்று மாலை ஏற்பினுல் மரணமானுர்கள். இன்னும் மூன்று குழந்தைகள் ஆபத்தான நிலையில் இருப்பதாக அறியப்படுகிறது.

கொக்குவிலைச் சேர்ந்த நாகமுத்து தம்பிப்பிள்ளையின் மூன்றரை வயதுக்குழந்தை சகுந்தலா நேற்று மாலை 3 மணிக்கும். புத்தூரைச்சேர்ந்த சின்னப்பொடி தம்பிராசாவின் ஒன்றரை வயது மகன் குலசிங்கம் மாலை 6 மணிக்கும் ஏற்பினுல் மரணமானுர்கள்.

இரு குழந்தைகளுக்கும் காதில் அடிக்கடி சீழ் வடிந்து வந்ததாகவும், இதன் காரணமாகவே அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் விசாரணையின் போது கூறப்பட்டது.

டாக்டர் செல்லத்துரை மரணவிசாரணையின் போது சாட்சியமளிக்கையில், காதில் சீழ் வடிந்ததைத் தொடர்ந்து, மூளை தாக்கப்பட்டதால் ஏற்புண்டானது என் தெரிவித்தார்.

மரண விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் நகரப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

இராமநாதன்

## இசைக்கல்லூரியின் இறுதிப்பரீட்சை

யாழ்ப்பாணம் செவ்.

இராமநாதன் இசைக் கல்லூரியின் முதலாவது இறுதி ஆண்டுப்பரீட்சையை நடத்தும் பொருட்டு தென்னிந்தியாவின் தலைசிறந்த சங்கீத விற்பன்னர்கள் இருவர் வரவழைக்கப்பட்டுள்ளனர். நான்கு வருட பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கான இறுதி ஆண்டுப் (டிப்ளமோ) பரீட்சை நாளை ஆரம்பமாகிறது.

இசையில் புலமை மிக்கவர்களும் பல பரீட்சைகளை நடத்தியவர்களுமானபேராசிரியர் பி. சாம்பமூர்த்தி, சந்தியாவந்தனம் ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாசராவ் ஆகியஇருவருமே இங்கு நாளை ஆரம்பமாகும் இராமநாதன் இசைக்கல்லூரியின் முதலாவது இறுதி ஆண்டுப் பரீட்சையை நடத்த அழைக்கப்பட்டுள்ளவர்கள்.

திரு. ஸ்ரீனிவாசராவ் சென்னை மத்திய கர்நாடக சங்கீதக்கல்லூரி அதிபராவர். சிறந்த பாடகரான இவர் பல வருடங்களாக அகில இந்திய வானொலி நிலையத்தில் தயாரிப்பாளராகவும் கடமையாற்றினர்.

பேராசிரியர் சாம்பமூர்த்தி சென்னைப் பல்கலைகழககத்தில் முன் சங்கீதப் பேராசிரியராவர். இவர் தற்பொழுதுதிருப்பதி வெங்கடேஸ்வர சர்வகலாசாலையில் சங்கீதசாஸ்திரப் பேராசிரியராக கடமையாற்றுகிறார். இவர் இந்திய சங்கீதப் பீடத்தின் தலைவராகவும் பணியாற்றுகிறார்.

திரு.ஸ்ரீனிவாசராவ் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். பேராசிரியர்சாம்பமூர்த்திஇன்று வருகிறார்.

## சுவர்ண்சிங் ஐ. நா. செல்வார்

புதுடில்லி, செப். 28

இந்திய வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் இன்று மாஸ்கோ புறப்படுகிறார். ஒரு நாள் அங்கு தங்கியபின், ஐ. நா. விலுள்ள இந்தியத் தூதுகோஷ்டிக்குத் தலைமை வகிக்கும் பொருட்டு நியூயோர்க் செல்வார்.

கொழும்பில்

## தபால்,தந்தி ஊழியர்வேலைநிறுத்தம் தந்தி, கடித விநியோகம் ஸ்தம்பிதம்

கொழும்பு, செவ்.

கொழும்பு பிரதம தபாற்கந்தோர், மத்திய தந்திக் கந்தோர் ஆகியவற்றின்சில பிரிவுகளில் ஏற்பட்டுள்ள வேலைநிறுத்தம் காரணமாக கொழும்புக்குள்ளேயும், கொழும்பிலிருந்து வெளியேயும் விநியோகிக்கப்படும் தபால் விநியோகம் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

எனவே மேல் அறிவித்தல்வரை தபால் அனுப்ப வேண்டாமென கேட்கப்பட்டிருக்கிறது. தந்திகளும் விநியோகிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்படுகிறது.

நேற்றுகொழும்பில்தபால் விநியோகம் நடைபெறவில்லை.

மத்திய தபாற்கந்தோரில் ஆயிரக்கணக்கான தந்திகள்வேலைநிறுத்தம்காரணமாகக் குவிந்து கிடக்கின்றன என்றும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த கடிதங்கள் உட்பட பல வெளியூர்களிலிருந்துவந்த கடிதங்களும், தந்திகளும் வெளிநாட்டுந்தந்திகளும்மூழ்கிக்கிடக்கின்றன என்றும்கூறப்பட்டது.

எனவே தந்திகளை நேரில் வந்து பெற்றுக்கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது.

கொழும்பு நகரிலுள்ள தபால் பெட்டிகளில் கடிதங்கள் நிறைந்து கிடக்கின்றன. அதை எடுக்கச்சென்ற தபால் சிப்பந்திகளை வேலைநிறுத்தம் செய்பவர்கள் தடுத்ததால் அவை எடுக்கப்படவில்லையெனக் கூறப்படுகிறது.

வேலை நிறுத்தத்தில் ஐந்து தபால் யூனியன்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. நேற்று அமுலுக்கு வரவிருந்த 106 தபால் ஊழியர்களின் வேலைமாற்றத்தை ஆட்சேபித்து வேலைநிறுத்தம் நடைபெற்றது.

தபால் மந்திரி இன்று தனது அதிகாரிகளைச் சந்தித்து வேலைநிறுத்தம் பற்றி பரிசிலித்துவருகிறார்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைகளையும் ஆதரிப்பாரில்லை. மீண்டும் இவர்களுக்கு மான்யங்களையும் வேறு பல சலுகைகளையும் அரசாங்கம் அளிக்குமாயின், இங்கு கலைஞர்கள் புது உற்சாகத்துடனும் கலைகளை வளர்த்து, நம் சமூகத்துக்கும் நாட்டுக்கும் இன்பமும் பெருமையும் அளிக்க முடியும்.

ஃ ஃ ஃ

சிமையிலே எடின் பரோவில் நடைபெறும் காமன்வெல்த் இசைவிழாவிலே பாலக்காடு மணியும் அவரது புதல்வரும் சேர்ந்து மிருதங்கம் வாசித்தனர். இதைக் கேட்ட ஒரு வெள்ளைக்கார வயலின் மேதை, மிகவும் வியப்புற்று ''எலக்டிரானிக் மெஷன் கூட சில தவறுகள் செய்யலாம். இந்த வாசிப்பில் ஒரு சிறு தவறுகூட இல்லையே. அந்தக் கைவிரல்களுக்குத்தான் எவ்வளவு வேகம், எவ்வளவுசுணக்கு!'' என்று பகிரங்கமாக அங்கு கூட்டத்தில் போற்றினுராம். கச்சேரி முடிந்ததும் ஐந்து நிமிட நேரம் விடாமல் பலத்த கரகோஷத்தால் தங்கள் மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் கூட்டத்தினர் தெரிவித்த செய்தியைப் படித்தபோது நமக்கு எவ்வளவு பெருமையாகவுள்ளது. அங்கு தமது தெட்சணுமூர்த்தியை அனுப்பி வைக்கவேண்டும் போல் எனக்குத் தோன்றியது. அந்த நன்நாளும் வரும்தானே.

ஃ ஃ ஃ

யாழ். கலாக்ஷேத்திரத்தில் மிருதங்கம், பரதநாட்டியம் முதலிய கலைப்பயிர்கள் வளர்வதைக் கண்டேன். நமது சிறுவர், சிறுமியர் சில மாதங்களில் அடைந்துள்ள முன்னேற்றம் போற்றத்தக்கது. மூன்று நாட்களாக பல கலைஞர்களும் மேலான கலைவிருந்தளித்தனர். கட்டணமில்லை. இது பெரிய ''கலை தானம்'' ஏராளமான மக்கள் ரசித்துப் பயன் பெற்றனர். இதன் உயிர்நாடியான கீதாஞ்சலி நல்லையாவின் சேவை நன்மையுடன் பாராட்டத்தக்கதாகும்.

ஃ ஃ ஃ

திருக்கேதிச்சரத்துக்குப் பக்கத்திலே ஒரு வயலில் சில மாடுகளுடன் ஐந்தாறு குதிரைகளும் மேய்வதைக் கண்டேன். ஸ்ரீ மாணிக்க வாசகசுவாமிகள் குதிரைகள் வாங்க மாதோட்டமெனும் கேதீச்சரத்துக்குத்தான வந்தாரென்றும், அதுவே திருப்பெருந்துறை என்றும் உள்ள காட்சியை, அங்கு கண்ட குதிரைகள் பலப்படுத்துவதாக இருந்தன.

ஃ ஃ ஃ

கறையார் கடல் சூழ்ந்த கழி மாதோட்ட நன்னகருள், சிறையார் பொழில் வண்டியாழ் செயுங் கேதீச்சரத்தானை, மறையார் புகழ் ஊரன்னடித் தொண்டனுரை செய்த, குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடா கொடுவினையே

— ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள்.

இ. போ. ச. இந்து ஊழியர்

## இரத்த தானம் செய்வர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் இ. போ. ச. இந்து ஊழியர் சங்கத்தினர் இரத்த வங்கிப் பகுதிக்கு இன்று காலை இரத்த தானம் வழங்குவார்கள்எனத்தெரிய வருகிறது.

இரத்ததானம் செய்பவர்களுக்கு அரசாங்கத்தினுல் வழங்கப்படும் பணத்தை இ. போ. ச. இந்து ஊழியர்கள் திருக்கேதீஸ்வர திருப்பணி நிதிக்காகக் கொடுத்து உதவுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'உயர்ந்த எண்ணத்தை பிரதிபலிக்க வேண்டும்'

நல்லூர், செவ்.

நாடகம் எழுதுவோர் தமது கற்பனையால் நாடகக் கதை ஒன்றினை உருவாக்கலாம். இல்லையேல் வரலாற்றுப் பின்னணியைக்கொண்டு அந்த வரலாற்றில் எவ்வித முரண்பாடும் இல்லாமல் நாடகங்களை எழுதலாம். இதனை விடுத்து பிறர் எழுதியிருப்பவற்றில் சிலசில பகுதிகளை ஒன்ருக்கி நாடகம் சொந்தமாக எழுதிவிட்டதாக எண்ணும் தவருன பண்பு நம்மிலிருந்து அகலவேண்டும்' என்று கலையரசு க. சொர்ணலிங்கம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நாடக விழாவிற் பேசும்போதுகுறிப்பிட்டார்.

கலையரசு சொர்ணலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

நாடகங்கள் மேடையேற்றப்படும்போது ஒப்பனை விஷயத்தில் மிகவும் சிரத்தையுடன் இருக்கவேண்டும். நாடகம் பார்ப்போர் உள்ளங்களில் உயர்வான எண்ணத்தை ஒப்பனை ஏற்படுத்தும். நாடக நடிக நடிகையர் தமது முகங்களை மட்டும்ஒப்பனை செய்து கொண்டால் போதாது. பாத்திரத்திற்கு ஏற்ற வகையில் ஒப்பனை அமையவேண்டும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org